# டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்
# தமிழ்த்துறை

## சிற்றிலக்கியம் - ( 19UTA12)

இரட்டைப் பருவம்


**வழங்கியவர்**

முனைவர் ப.பிரதீபா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை


http://www.trinitycollegenkl.edu.in/

# சிற்றிலக்கியம்

அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியம்.

சிற்றிலக்கியம் அளவில் சுருங்கியதாக அமைவது.

அகப்பொருள், அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும். பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும்.

# சிற்றிலக்கிய வகைகள்

- ❖சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கை 96 என மரபாக கூறப்படுகிறது.
- ❖இதன் எண்ணிக்கைக் குறித்து அறிஞர்களிடையே எண்ணிக்கை மாறுபாடு உள்ளது.
- ❖இந்த எண்ணிக்கையானது குறைந்தபட்சம் 186 என்றும், 417 என அதிகப்பட்சமாகவும் கூறப்படுகிறது.
- ❖தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகைமையுள் அடங்கும்.

# சிற்றிலக்கியக் காலம்

•சங்க காலத்திலேயே சிற்றிலக்கியம் தோன்றிவிட்டது எனலாம்

•சங்கம் மருவிய காலத்துத் தொகையான பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள இனியவை நாற்பது, இன்னா நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகியவை சிற்றிலக்கியங்களே ஆகும். பின்னர்ப் பல்வேறு காலங்களில் பல்வேறு சிற்றிலக்கிய நூல்கள் இன்று வரையிலும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

•**கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை** சிற்றிலக்கிய வகைகள் மேலோங்கி நின்றன. இக்காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கலாம்.

# முத்தொள்ளாயிரம்

- இது வெண்பா யாப்பில் எழுதப்பட்ட நூல்,
- இது சேர சோழ பாண்டியர்களின் புகழ் பாடுவது. எந்தக் குறிப்பிட்ட மன்னனையும் இது பாடவில்லை. மூன்று குடியினருக்கும் உரிய கோதை, கிள்ளி, மாறன் முதலான பொதுவான பெயர்களே இதில் இடம் பெற்றுள்ளன.
- நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் தொகுதியில் இருந்து எடுக்கப்பட்ட 108 செய்யுட்களே இன்று முத்தொள்ளாயிரம் என்ற பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி….

# முத்தொள்ளாயிரம்

- இந்நூலின் பெயர் இருவகைகளில் விளக்கப்படுகிறது. மூன்று வேந்தர்களையும் பற்றிய 900 பாடல்கள் கொண்டது என்பது ஒரு சாரார் கருத்து. மூவேந்தருள் ஒவ்வொருவரையும் தனித்தனியே தொள்ளாயிரம் பாடல்களில் புகழும் நூல் இது என்பது இன்னொரு சாரார் கருத்து. இவ்விரண்டாவது கருத்தின் படி இந்நூலுக்குரிய செய்யுட்கள் 2700 ஆகும்.

- இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியபப்படவில்லை

- இந்நூலின் ஆசிரியர் கி.பி. 5ஆம் நூற்றாண்டை ஒட்டிய காலத்தவர் என்கின்றார்.

# மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்

- மதுரை மீனாட்சியம்மை பிள்ளைதமிழ் என்ற நூல் பிள்ளைதமிழ் என்ற சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தது.
- பிள்ளைத்தமிழ் இலக்கியங்களில் மிகச் சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது.
- மதுரையில் எழுந்தருளியுள்ள மீனாட்சியம்மையைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டது.
- மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழின் ஆசிரியர் குமரகுருபரர்.
- காலம் 17 ஆம் நூற்றாண்டு
- குமரகுருபரர் மன்னர் திருமலை நாயக்கர் முன்னிலையில் மீனாட்சியம்மன் கோவில் வளாகத்தில் பாடப்பட்டது.

# மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்

## நூலமைப்பு

- ✓ இந்நூலில் மொத்தம் 102 பாடல்கள் உள்ளன.
- ✓ இந்நூலின் முதலில் விநாயகர் வணக்கம் இடம் பெற்றுள்ளது.
- ✓ காப்புப் பருவத்தில் திருமால், சிவபெருமான், சித்திவிநாயகக் கடவுள், முருகக்கடவுள், பிரமதேவர், தேவேந்திரன், திருமகள், கலைமகள், துர்க்கை, சத்தமாதர்கள், முப்பத்துமூவர் ஆகியோரிடம் பாட்டுடைத்தலைவியாகிய மீனாட்சியம்மையைக் காக்குமாறு பதினோரு பாடல்களில் குமரகுருபரர் வேண்டுகிறார்.
- ✓ ஏனைய தால், செங்கீரை முதலிய ஒன்பது பருவங்களில் பருவத்துக்குப் பத்து பாடல்கள் வீதம் தொண்ணூறு பாடல்கள் அருளப்பெற்றுள்ளன.

# கலிங்கத்துப்பரணி

- பரணி என்பது போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பாடும் சிற்றிலக்கிய வகை ஆகும்
- பரணி நூல்களில் காலத்தால் முற்பட்டது கலிங்கத்துப் பரணி.
- கலிங்கத்துப் பரணி 599 தாழிசைகளை உடையது.
- முதல் குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின் மீது படை எடுத்து வெற்றி பெற்றான். இந்த வெற்றியைச் சிறப்பித்துப் பாடியதே கலிங்கத்துப் பரணி ஆகும்
- கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் சயங்கொண்டார். 'பரணிக்கு ஓர் சயங்கொண்டான்' என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இவரைப் பாராட்டி உள்ளார். இவரது இயற்பெயரை அறிய முடியவில்லை.

தொடர்ச்சி.....

# கலிங்கத்துப்பரணி

சயங்கொண்டார் காலம் 11-ஆம் நூற்றாண்டின் இறுதியாகவோ 12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகவோ இருக்கலாம்.

கலிங்கத்துப் பரணி 14 பகுதிகளை உடையதாக அமைக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து | இராச பாரம்பரியம் |
| கடை திறப்பு | பேய் முறைப்பாடு |
| காடு பாடியது | அவதாரம் |
| கோயில் பாடியது | காளிக்குக் கூளி கூறியது |
| தேவியைப் பாடியது | போர் பாடியது |
| பேய்ப்பாடியது | களம் பாடியது |
| இந்திரசாலம் | கூழ் அடுதல் |

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/